தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 340

இராயர் அப்பாச்சி கதைகள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 340

இராயர் - அப்பாச்சி கதைகள்

பதிப்பாசிரியர் :

முனைவர் **ய. மணிகண்டன்**, எம். ஏ., எம். ஃபில்.,
முன்னாள் தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

2006

விலை : ரூ. 15-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: இராயர் - அப்பாச்சி கதைகள்
பதிப்பாசிரியர்	: முனைவர் ய. மணிகண்டன்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	: 340
மொழி	: தமிழ்
பதிப்பு	: இரண்டாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: செப்டம்பர், 2006
தாள்	: டி. என். பி. எல். 18.6 கி. கி.
நூல் அளவு	: 24 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 48
படிகள்	: 500
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: கதைகள்
விலை	: ரூ. 15-00

வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் தமிழ்த்துறையைச் சேர்ந்த 1830ஆம் எண்ணிடப்பெற்ற ஓலைச்சுவடியில் மரியாதை ராமன் கதைகள், இராயர் - அப்பாச்சி கதைகள் ஆகிய இரண்டும் முழுமையும் எழுதப்பெற்றும், தெனாலிராமன் கதைகள் தொடக்கம் மட்டும் (ஒருகதை மட்டும்) எழுதப்பெற்றுப் பின் தொடர்ந்து எழுதப்படாமல் நின்றுபோயும் உள்ளது. இவ்வோலைச் சுவடியே இப்பதிப்புக்கு அடிப்படையாக அமைந்த சுவடியாகும்.

இவ்வோலைச்சுவடி, கரூர் வட்டம் தாளியாபட்டியைச் சேர்ந்த திரு. வை. பாலார் கவுண்டர் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியாதாகும். இவ்வோலைச் சுவடில் 38 ஏடுகளில் கதைகள் எழுதப் பெற்றுள்ளன.

இராயர், அப்பாஜி என்னும் பெயர்கள் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரையும், அவருடைய அமைச்சர் சாளுவ சிம்மராசு அப்பாஜியையும் குறிப்பன. அப்பாஜியின் காலம் 16ஆம் நூற்றாண்டு ஆகும்.

இராயர் - அப்பாஜி கதைகளைக் கூறும் பல நூல்கள் வெளிவந்திருக்கின்ற போதிலும், இவற்றில் எதுவும் ஓலைச்சுவடியில் இருந்து பதிப்பிக்கப் பெற்றதாக இல்லை. ஆகவே, இக்கதைகளுக்குச் சுவடிப் பதிப்பு நூல் ஒன்று இன்றியமையாததாகிறது.

இச்சுவடிகளை இந்நூலகத்தில் முன்பு பணியாற்றியத் தமிழ்ப் பண்டிதர் திரு. ய. மணிகண்டன் இனிய தமிழில் பதிப்பித்துள்ளார். அவர் இத்தலைப்பில் பல பதிப்புகள் வெளிவந்துள்ளபோதும் இப்பதிப்பின் இன்றியமையாமை தெரிவித்து இதை ஒரு ஆய்வு நூலாகவே தந்துள்ளார். இந்நூலுக்கு இடப்பட்டுள்ள தலைப்பு குறித்து வரலாற்றுக்குப் பொருந்தா புனை உரைக் கதைகள் பற்றியும், பிற இராயர் - அப்பாச்சி கதைகள் கூறும் பதிப்பு நூல்கள் மூலம் குறித்தும், நம் பதிப்பு நூலில் இடம்பெறாத கதை குறித்தும் ஆழ்ந்து ஆய்வுசெய்துள்ளார். அன்னாரின் நன்முயற்சிக்கு என் இனிய பாராட்டுக்கள்.

இந்நூல் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட நூலகப் பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
16-9-2006

பதிப்பாசிரியரின் முகவுரை

முன்னுரை :

மரியாதைராமன் கதைகள், தெனாலிராமன் கதைகள், இராயர்-அப்பாஜி கதைகள் முதலியன வாய்மொழி இலக்கிய இயல்புகள் நிரம்பப் பெற்றவை. இலக்கிய அழகு மிகுந்த இவை மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்பவையாகும். குறிப்பாகச் சிறுவர்களை ஈர்க்கும் திறம்படைத்தவை இவை.

இவற்றில் மரியாதைராமன் கதைகள் ஏற்கனவே என்னால் பதிப்பிக்கப் பெற்றுச் சரசுவதி மகால் நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது. மரியாதைராமன் கதைகள் குறித்த நெடிய ஆய்வுக் கட்டுரையொன்று மகால் நூலகப் பருவ இதழில் விரைவில் வெளிவர உள்ளது.

இப்பொழுது, இங்கு இராயர் - அப்பாஜி கதைகள் இராயர் - அப்பாச்சி கதைகள் என்னும் தலைப்பில் பதிப்பிக்கப்பெற்று நூலுருப் பெற்றுள்ளது. இப்பதிப்பு தொடர்பான செய்திகளை இனிக் காணலாம்.

பதிப்புக்கு அடிப்படையான மூல ஓலைச்சுவடி குறித்து :

சரசுவதி மகால் தமிழ்த்துறையைச் சேர்ந்த 1830-ஆம் எண்ணிடப் பெற்ற ஓலைச்சுவடியில் மரியாதைராமன் கதைகள், இராயர் - அப்பாச்சி கதைகள் ஆகிய இரண்டும் முழுமையும் எழுதப்பெற்றும், தெனாலிராமன் கதைகள் தொடக்கம் மட்டும் (ஒருகதை மட்டும்) எழுதப்பெற்றுப் பின் தொடர்ந்து எழுதப்படாமல் நின்றுபோயும் உள்ளது. இவ்வோலைச் சுவடியே இப்பதிப்புக்கு அடிப்படையாக அமைந்த சுவடியாகும்.

இவ்வோலைச்சுவடி, கரூர் வட்டம் தாளியாபட்டியைச் சேர்ந்த திரு. வை. பாலார் கவுண்டர் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியதாகும். இவ்வோலைச் சுவடியில் 38 ஏடுகளில் கதைகள் எழுதுப்பெற்றுள்ளன.

இராயர், அப்பாஜி

இராயர், அப்பாஜி என்னும் பெயர்கள் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரையும், அவருடைய அமைச்சர் சாளுவ திம்மராசு அப்பாஜியையும் குறிப்பன. அப்பாஜியின் காலம் 16-ஆம் நூற்றாண்டு ஆகும்.

இராயர் - அப்பாஜி கதைகள்

நுட்பமான மதிநலங்கொண்ட அமைச்சர் அப்பாஜியின் தீரச் செயல்களை விவரிக்கும் கதைகள் தெலுங்கு மொழியிலும் தமிழ் மொழியிலும் (தலைமுறை தலைமுறையாகப் பரவி வழங்கி) எழுதப் பெற்றுள்ளன. இக்கதைகள் வாய்மொழி இலக்கிய இயல்புகள் பெற்று வரலாற்றை ஒட்டி உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டும், வரலாற்றுக்குப் பொருந்தாத நிகழ்ச்சிகளைக் கொண்டு கற்பனையாகப் புனையப்பெற்றும் பரவியுள்ளன.

இக்கதைகள் முதலில் தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப் பெற்றிருக்கலாம். அல்லது கர்ணபரம்பரைக் கதையாகத் தெலுங்கு மொழி பேசுவோரிடமிருந்து தமிழர்களிடத்தில் இக்கதைகள் பரவியிருக்கலாம்.

மொழி பெயர்க்கப்பட்ட அல்லது கர்ணபரம்பரையாகப் பரவிய இக்கதைகள் ஓரிரு தலைமுறைகளுக்கு முன் ஓலைச்சுவடியில் பதிவு செய்யப்பெற்றிருக்கக்கூடும். அவற்றிலிருந்து பிரதி செய்யப் பெற்றவற்றுள் ஒன்றாக இந்நூலகத்திற்குக் கிடைத்துள்ள இப்பிரதி இருக்கக்கூடும்.

இராயர் - அப்பாஜி கதைகள் இடம்பெற்றுள்ள சில நூற்பதிப்புகள்

இராயர் - அப்பாஜி கதைகள் என்னும் தலைப்பில் தமிழில் இதற்கு முன்பே பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் சிலவற்றின் பதிப்பு விவரங்கள் :

1. மதன காமராஜன் மரியாதைராமன் கதைகள்

என்னுந் தலைப்பிலான நூலில் 350-ஆம் பக்கம் முதல் 375-ஆம் பக்கம் வரை இராயர் - அப்பாஜி கதைகள் இடம்பெற்றுள்ளன.

பதிப்பாசிரியர் : அரு. இராமநாதன், முதற்பதிப்பு : 1958, எட்டாம் பதிப்பு: 1989, வெளியீடு : பிரேமா பிரசுரம், சென்னை.

2. இராயர் - அப்பாஜி கதைகள்

நெ. சி. தெய்வசிகாமணி, 1984, ஸ்டார் பிரசுரம், சென்னை.

3. இராயர் - யுக்திக் கதைகள்

பதிப்பாசிரியர் : முல்லை முத்தையா, முதற்பதிப்பு : 1986, மூன்றாம் அச்சு 1988, வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

4. இராயர் - அப்பாஜியின் நகைச்சுவைக் கதைகள்

தமிழில் : ஏ. எஸ். வழித்துணைராமன் என்றுள்ளது. தெலுங்கிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாக இருக்கலாம். விவரம் இல்லை. முதற்பதிப்பு : 1989, வெளியீடு : பாரதி பதிப்பகம், சென்னை.

5. இராயர் - அப்பாஜி கதைகள்

ஆக்கியோர்: மணிமேகலை பிரசுர ஆசிரியர்குழு, பதிப்பாசிரியர்: லேணா தமிழ்வாணன், திருந்திய முதற்பதிப்பு : 1989, வெளியீடு : மணிமேகலை பிரசுரம், சென்னை.

6. அப்பாஜி - பீர்பால் கதைகள்

எ. சோதி, முதற்பதிப்பு : 1991, நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி.

(இன்னும் சில பதிப்புகள் இராயர் - அப்பாஜி கதைகளுக்கு (பழம்பதிப்புகள்) வெளிவந்திருப்பதாகத் தெரிகின்றது. இந்நூலின் மறுபதிப்பில் அவற்றைத் தேடித் தொகுத்து அடைவு செய்து அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பெறும்.

பிறபதிப்புகளின் தன்மைகள்

பல்வேறு தனியார் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள், பள்ளி மாணவர்களை ஈர்க்கும் விதத்தில் இராயர் - அப்பாச்சி கதைகளை வெளியிட்டுள்ளன. இந்நிறுவனங்களின் நூல் வெளியீட்டு முயற்சிக்கு விற்பனை நோக்கே முதன்மையானதாகும்.

மேலே காட்டப்பெற்றுள்ள ஆறு வெளியீட்டு நிறுவனங்களின் இராயர்-அப்பாஜி கதைகளும் மொழி நடையால் பேரளவும், கதைப் பகுதிகளால், சொல்லும் முறையால் ஓரளவும் வேறுபடுகின்றன. இந்நூல்கள் எவற்றிலும், ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு அவை பதிப்பிக்கப் பெற்றதென்னும் குறிப்பு இல்லை. இவை எவையும் ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்க பெறவில்லைதாம். இவற்றுள் முன் வழங்கிய இக்கதைகளை (கதைகள் இடம்பெற்ற இன்னும் பழைய பதிப்பு நூல்களை) மனத்துள் வாங்கித் தத்தம் மனப்போக்குக்கும் வணிக நோக்குக்கும் ஏற்பத் தத்தம் நடையில் மாறுதல்களுடன் எழுதியுள்ளனர்.

சில நூல்களை ஓரிரு கதையை நீக்கிவிட்டும், சில நூல்கள் சில பகுதிகளை மாற்றிவிட்டும் வெளிவந்துள்ளன.

நமது நூலகப் பதிப்பான இப்பதிப்பின் தேவை

மேலே கூறியுள்ளபடி, இராயர்-அப்பாஜி கதைகளைக் கொண்ட பல நூல்கள், பல பதிப்புகள் வெளிவந்துள்ள சூழ்நிலையில் இப்பதிப்பு வெளிவருவதன் தேவை என்ன என்று சிலர் கருதக்கூடும்.

இராயர் அப்பாஜி கதைகளைக் கூறும் பல நூல்கள் வெளிவந்திருக்கின்ற போதிலும், இவற்றில் எதுவும் ஓலைச்சுவடியில் இருந்து பதிப்பிக்கப் பெற்றதாக இல்லை. ஆகவே, இக்கதைகளுக்குச் சுவடிப் பதிப்பு நூல் ஒன்று இன்றியமையாததாகின்றது.

நமது நூலக ஓலைச்சுவடியில் இடம்பெற்றுள்ள கதைகளின் மொழிநடை, பிற பதிப்புகளின் கதைகளின் மொழி நடையிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. கதைப்போக்கில் மெல்லிய மாறுதல்களைக் கொண்டிருக்கின்றது. இத்தன்மை வாய்மொழி இலக்கிய ஆராய்ச்சிக்கும், கடந்த நூற்றாண்டு மொழிநடை குறித்த ஆராய்ச்சிக்கும் பெரிதும் பயன்படும் என்னும் நோக்கத்தில் இப்பதிப்பு வெளிவருகின்றது.

இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள கதைகளின் மொழிநடை

இராயர்-அப்பாஜி கதைகளின் மொழிநடை, பேச்சு வழக்குச் சொற்களால் ஆனது. வடமொழிச் சொற்களின் ஆட்சி அதிக அளவில் காணப்படுகின்றது.

ஆயினும், அப்பாஜி, பாதுஷா என்னும் இரு சொற்கள் மட்டும் அப்பாச்சி, பாச்சா என்று தமிழ்மொழியின் இயல்புக்கேற்ப மருவி வடிவங்களுடனேயே சுவடியில் தொடக்கம் முதல் இறுதிவரை அமைந்துள்ளன.

இராயர் - அப்பாச்சி கதைகள் என்னும் இப்பதிப்பு நூலின் தலைப்பு குறித்து

இக்கதைகளைக் கொண்ட பிறபதிப்புகள் தம் நூல் தலைப்பில் 'அப்பாஜி' என்னும் சொல் வடிவினைப் பயன்படுத்த, இப்பதிப்பு நூலின் தலைப்பு மட்டும் 'அப்பாச்சி' என்னும் சொல்வடிவையே பயன்படுத்துவதாக அமைந்துள்ளது. சுவடியில் தலைப்பிலும், கதைகளுக்குள்ளும் 'அப்பாச்சி' என்னும் சொல்வடிவமே இடம் பெற்றுள்ளது. கதைகளைப் புனைந்தவர் அல்லது ஏடு எழுதியவர் கதைகளுக்குள் 'வேஷம்', 'புருஷன்' முதலிய வடமொழிச் சொற்களை வடவெழுத்துடனேயே எழுதியுள்ளார். ஆனால் 'அப்பாஜி', 'பாதுஷா' ஆகிய இரு சொற்களை மட்டும் அப்பாச்சி, பாச்சா என்றே தமிழியல்பிற்கேற்ப எல்லா இடங்களிலும் ஆண்டுள்ளார்.

தமிழ்நலஞ் சான்ற சொல் வடிவங்கள் என்னும் நோக்கிலும், இப்பதிப்பு நூலின் தனித்தன்மைகள் என்னும் நோக்கிலும், ஆய்வாளர்களுக்குப் பயன்படவேண்டும் என்னும் கருத்திலும் இச்சொற்களே இப்பதிப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நோக்குகளின் அடிப்படையில், இப்பதிப்பு நூலின் தலைப்பும் 'அப்பாச்சி' என்னும் சொல்வடிவையே கொண்டிலங்குகிறது.

"வரலாற்றுக்குப் பொருந்தாத ஒரு கதை" என்னும் குறிப்பு

இராயர் - அப்பாஜி கதைப் பதிப்புகளில் முதல்கதையாக இடம்பெறும் அப்பாஜி (முதலில் சிற்றரசனிடம் மந்திரியாக இருந்துவிட்டுப் பின்) இராயரிடம் மந்திரியாகும் கதை, இராயர் - அப்பாஜி வரலாற்றுக்குப் பொருந்தாததாக உள்ளமையை

முற்பதிப்பாசிரியர்களில் ஒருவரான திரு. நெ. சி. தெய்வசிகாமணி தெரிவித்துள்ளார்.

அக்கருத்துரை

> வரலாற்றுப் புகழ்பெற்ற இவ்விருவரைப் பற்றியும் வழங்கப்படும் கதைகளில் வரலாற்றுக்குப் புறம்பான சில கதைகளும் அடங்கியுள்ளன.
>
> உதாரணமாக, இந்நூலின் பழைய பதிப்புகளில் வரும் முதல் கதையில் அப்பாஜி வேறு ஓர் அரசரிடம் அமைச்சராக இருந்ததாகவும், இராயர் அவருடைய அறிவுத்திறனை வியந்து அவரைத் தம்முடைய மந்திரியாக ஆக்கிக்கொண்டதாகவும் வழங்குகின்றது. இது வரலாற்றுக் குறிப்புகளுக்குப் பொருந்ததாத கதை.
>
> உண்மையில், கிருஷ்ணதேவராயரைச் சிறுவயதிலிருந்து வளர்த்துவந்தவர் அப்பாஜி. சிறு வயதில் இராயருக்குப் பகைவர்களால் ஆபத்து நேரிடும்போது, அந்த ஆபத்துகளினின்றும் அவரைக் காத்தவர் அப்பாஜி.
>
> கிருஷ்ணதேவராயர் இந்த நன்றியை மறக்காமல் அவரைத் தம்முடைய முதன்மந்திரியாக நியமித்துக்கொண்டார்.

என்று அவர்தம் ''இராயர் அப்பாஜி கதைள்'' நூலின் முன்னுரையில் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

இதுபோன்ற கதைப்பகுதிகள், ஆராயப்புகுவார்க்கு விருந்தாக அமையும்.

பிற இராயர் - அப்பாஜி கதைகள் பதிப்பு நூல்களின் மூலம்

இப்போது நம் பார்வைக்குக் கிடைக்கின்ற பிற பதிப்பு நூல்கள், அறுபது, எழுபது அல்லது நூறு ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த பழம்பதிப்பு நூல்களையே அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருக்கும். பழம்பதிப்பு நூலின் மொழி, நடை, கதைப் போக்குகளில் தத்தம் மனப்போக்கிற்கு ஏற்ப மாறுதல்களைச் செய்து இவற்றின் பதிப்பாசிரயர்கள் இக்கதைகளை வெளியிட்டுள்ளனர்.

மிகப் பழம்பதிப்பு நூல்களின் மூலம் வாய்மொழியிலிருந்து சேகரிக்கப்பெற்றதாகவோ, மொழிபெயர்க்கப் பெற்றதாகவோ சுவடியிலிருந்து எடுக்கப்பெற்றதாகவோ இருக்கவேண்டும். மிகப் பழம்பதிப்பு நூல்கள் கிடைக்கப் பெறும்போது இவற்றின் மூலம் குறித்தும் பதிப்பாசிரியர்களால் செய்யப்பெற்ற மாற்றங்கள் குறித்தும் பல உண்மைகள் வெளிப்படும்.

நமது சுவடிப்பதிப்பு நூலில் இடம்பெறாத கதை

பிறஇராயர் அப்பாஜி கதைப் பதிப்புகளில் காணப்படும் இறுதிக்கதையான பாதுஷாவைக் கண்டுபிடிக்கும் கதை நமது சுவடியில் காணப்படவில்லை. அதனால் இப்பதிப்பு நூலில் அக்கதை இடம்பெறவில்லை.

சுவடியில் விடுபட்டுள்ள ஒரு கருத்து பற்றிய குறிப்பு

''குறிப்பிற் சொன்னவைகளை வெளிப்படுத்தியது'' என்னும் 14-ஆவது கதையில் சுவடியில் விடுபட்டுள்ளது. இது ''பிள்ளைக்காம்'' என்பதற்கான விளக்கம் ''தென்னம் பிள்ளை வைத்து வளர்ப்பதற்கு ஏற்ற நிலம்'' என்பதாகும். (ஆதாரம் : பிற பதிப்புகளில் அமைந்துள்ள இதே கதைகளின் பகுதிகள்.)

நன்றியுரையும் நிறைவுரையும்

மரியாதைராமன் கதைகள், இராயர்-அப்பாஜி கதைகள் போன்ற பேச்சுவழக்கு நடையிலான சுவடி நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதன் தேவையை எடுத்துக்கூறி, இந்நூலைப் பதிப்பிக்க ஆணையிட்ட அப்போதைய சரசுவதி மகால் நூலக இயக்குநர் திருமிகு. மு. சதாசிவம் அவர்களுக்கு முதலில் என் நன்றியை உரித்தாக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் வெளிவரும் இவ்வேளையில் சரசுவதி மகால் நூலக இயக்குநர் பொறுப்பு வகிக்கும் பெருமதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு. தி. சண்முகராஜேஸ்வரன், இ. ஆ. ப., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூற் பதிப்புக்குத் தேவையானவற்றை மிகுந்த ஆர்வத்துடனும் அன்புடனும் செய்து உதவிபுரிந்த சரசுவதி மகால் நூலக நிருவாக அதிகாரி (பொறுப்பு) திருமிகு. அ. பஞ்சநாதன், எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கி மகின்றேன்.

வாய்மொழி இலக்கியம், தமிழ் உரைநடை குறித்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் இப்பதிப்பைப் பயன்படுத்திக்கொள்வர் என்று நம்புகிறேன். தமிழில் இதுவரை வெளிவந்துள்ள 'இராயர் அப்பாஜி கதைப்' பதிப்பு நூல்கள் அனைத்தையும் திரட்டிப் பதிப்புக்குப் பதிப்பு ஏற்பட்டுள்ள மாறுபாடுகள், சில கதைகள் சில பதிப்புகளில் நீக்கப்பட்டமைக்கும், சில கதைகள் சில பதிப்புகளில் சேர்க்கப்பட்டமைக்குமான காரணம், அச்சுயந்திர வெளியீட்டு சாதனங்களின் வளர்ச்சி - விற்பனை நோக்கம் முதலியவற்றால் இக்கதைகள் பெற்ற மாற்றங்கள் வாய்மொழி இலக்கியம் என்னும் நோக்கு முதலிய கோணங்களில் ஆய்வாளர்கள் இக்களத்தில் ஆய்வு நிகழ்த்துவதற்கு வாய்ப்புள்ளமையை இவண் சுட்டிக்காட்டி அமைகின்றேன்.

ப. மணிகண்டன், எம். ஏ., எம். ஃபில்.,
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
1-3-92



அப்பாஜி

சாளுவ திம்மராசு அப்பாஜி என்பது இவருடை முழுப்பெயர். இவர் விஜயநகரப் பேரரசனான கிருஷ்ண தேவராயரின் அமைச்சர். இவருடைய கூர்ந்த அறிவை விளக்கும் கதைகள் பல உண்டு.

கலைக்களஞ்சியம் (தொகுதி - 1)
(தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடு)

இவன் வேலூராண்ட கிருஷ்ணதேவராயன் மந்திரி. இவன் இளமையில் தாய் தந்தையரையிழந்து கல்வியறிவிலாது யதேச்சையாய்த் திரிந்தவன். இவன் ஒருநாள் காட்டுவழியில் தன்னை யறியாது தூங்கிக்கொண்டிருக்கையில் நாகமொன்று வெயிற்படாது முகத்தைக் காத்திருந்தது. அந்த வேளையில் வழிப்போக்கன் ஒருவன் அதனைக்கண்டு அவனெழுந்தபின் அப்பா உனக்குச்சில நாளில் இராஜ்ய சம்பத்து உண்டாகும். அந்தக் காலத்தில் என்னை ஆதரிக்கின்றாயா என, அப்பாஜி எழுத்தறியாத எனக்கு இராச்சியமேது அப்படி உண்டாகுங்காலத்தில் செய்கிறேன் எனக்கூறினான். சிலநாள் தரித்து அப்பாஜி இராஜாங்க உத்தியோகஸ்தரைச் சேர்ந்து ஒரு சிறு அலுவல் பெற்று முறையாக உயர்ந்து அதிக புத்தி நுட்பமுடையவனாய் மந்திரிபதம் பெற்றுத் தனக்குச் செல்வம் வருமென்றவனைத் தேடி ஆதரித்தவன். இவனைப் பற்றிப் பல சிறுகதைகள் உண்டு.

- அபிதான சிந்தாமணி

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்.

உள்ளுறை

எமது வெளியீடுகள்

ஆலம்நபி கதைப்பாட்டு	15-00
தணிகைக் கலம்பகம்	25-00
சிவபாரத சரிதம்	16-00
இராசகோபாலமாலை	18-00
திருவேட்டைநல்லூர் ஐயனார் பள்ளு	26-00
குந்தமாலை	40-00
வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி	8-00
நாலுமந்திரி கும்மி	15-00
நாலடியார் உரைவளம் (பாகம்-I)	90-00
நாலடியார் உரைவளம் (பாகம்-II)	75-00
தனிப்பாடல் திரட்டு (பாகம்-I)	30-00
தனிப்பாடல் திரட்டு (பாகம்-II)	40-00
திருக்குறள் பழைய உரை	25-00
கணக்கதிகாரம்	150-00
ஆஸ்தானகோலாகலம்	80-00
பொன்னர் சங்கர் அம்மானை	40-00
திருக்குறள் ஜைன உரை	75-00
வைத்தியநாதஸ்வாமி திருவிளையாடல்	8-00
நாகை கனகசபைநாதன் உலா	50-00
மரியாதைராமன் கதைகள்	22-00
குசலவன் கதை	15-00
ஞானக்குறவஞ்சி	20-00
களாபூர்ணோதயம்	40-00
பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்	14-00
சுந்தரி அம்மானை	12-00
குமரேச சதகம்	65-00
அருகிரி அந்தாதி	12-00
பதிப்புநெறி முறைகள்	10-00
புல்லையந்தாதி	12-00
சோமயாகப் பெருங்காவியம்	19-00

இராயர் அப்பாச்சி கதைகள்

முதலாவது

அப்பாச்சிக்கு முதன்மந்திரி பட்டம் கொடுத்தது

இராயர் இராசரீகம் பண்ணுகிற காலத்திலே தமக்குள் அடங்கிய குறுநில மன்னர்களையெல்லாம் வரச்சொல்லி உத்தரவு செய்தார். ஒருவன் தவிர மற்றவர்கள் எல்லோரும் வந்தார்கள்.

அவ்வொருவனுக்குப் பதிலாக அவனிடத்தில் மந்திரியாக இருந்த அப்பாச்சி வந்தான். எல்லாரும் இராயர் தரிசனத்துக்குச் சென்றபோது தனித்தனியே அவரவர் பேரைக் கேட்டுத் திட்டவட்டம் செய்து வருகையில், கடைசியில் அப்பாச்சி வந்தான். "உன் பேர் என்ன?" என்று கேட்கும்போது, "என் பெயர் அப்பாச்சி, என் எசமானனுக்குப் பதிலாக வந்தேன்" என்றான்.

முதலாளி வராமல் தன்னுடைய மனுசனை அனுப்பினான் என்று கோபங்கொண்டு, அதைக் காட்டாமல் இராயர், "உன் எசமானனை அனுப்பு" என்று உத்தரவு செய்தார்.

அப்படியே அழைப்பித்து நாலு நாழிகை வழிக்கு அப்புறம் ஓரூரிலே நிறுத்திவைத்தான்.

இப்படி இருக்கிறச்சே ஒருநாள் இராயர் கசாப்புக் கடை மார்க்கமாகச் சவாரி போகிறபோது, அந்தக் கடைக்காரன் ஆட்டைக் கட்டி உரிக்கிறதைப் பார்த்து, "உன் எசமானனைச் சீக்கிரத்தில் அழைப்பி" என்று அப்பாச்சியுடனே சொன்னார்.

கசாப்புக்கடை அண்டையிலே போகிறபோது உத்தரவு செய்தபடியினாலே ஆட்டைக்கட்டி உரிக்கிறதுபோல் தன் எசமானைக் கட்டி உரிக்க நினைத்து இருக்கிறதாகத் தோன்றி

அப்பாச்சி சீக்கிரத்தில் தன் எசமானை ஊருக்குப்போய்விடச் சொல்லிச் சமாசாரம் எழுதிப்போட்டான்.

அப்படியே அவன் போய் ஊரிலே போய்ச் சேர்ந்தான்.

கொஞ்சநாள் போன பிறகு இராயர் சந்தோஷமாய் இருக்கிற நாளையிலே அப்பாச்சியைப் பார்த்து, "உன் எசமான் வந்தானோ?" என்று கேட்டார்.

இன்னும் வரவில்லையென்று சொன்னான். "என்னத்தினாலே ஆலசியம்?" என்று கேட்டார். "அய்யா" என் எசமானை ரட்சிக்கிறேன் என்று வாக்குக் கொடுத்தால் ஆலசியத்திற்குக் காரணஞ் சொல்லுகின்றேன்" என்றான்.

"உன் இஷ்டப்படியே வாக்கு கொடுத்தேன். சொல்" என்றான். "என் எசமான் சமீபத்திலே வந்து இருந்தான். தாங்கள் கோபங்கொண்டு இருக்கிறதைக் கண்டு ஊருக்குப் போகச்சொல்லி எழுதி அனுப்பிவிட்டேன்" என்றான்.

"எனக்குக் கோபம் வந்தது உனக்கு எப்படித் தெரிந்தது" என்றான். "கசாப்புக்கடை அண்டையிலே போகிறபோது ஆட்டை உரித்துக் கொண்டிருக்கிறது தங்கள் பார்வையில் பட்ட மாத்திரத்தில் அழைப்பிக்கச் சொல்லி உத்தரவு செய்தபடியினாலே ஆட்டை உரிக்கிறதுபோலே என் எசமானைக் கட்டி உரிக்க நினைத்ததாக என் புத்தியில் தோன்றினது" என்றான்.

இராயர் அதுகேட்டு மெத்த ஆச்சரியப்பட்டு அப்பாச்சியைத் தன்னிடத்தில் மந்திரியாக வைத்துக்கொண்டு அவன் எசமானையும் ரட்சித்தார்.

ஆகையினாலே புத்தியுள்ளவர்களுக்குச் சித்தியாத தொன்றில்லை என்றறிக.

இரண்டாவது

உத்தியோகத்துக்குத் தக்க சுகம் என்றது

ஒருநாள் இராத்திரி எல்லாம் விடாமழையாகப் பெய்து கொண்டு இருந்தது. விடியற்காலத்திலே மழை விட்டபின்பு இராயரும் அப்பாச்சியும் புறப்பட்டு ஊருக்குப் புறத்திலே காட்டு வெளியிலே வெள்ளத்தின் சிறப்பைப் பார்க்கப் போனார்கள்.

அங்கே ஒரு இடையன் தன் மந்தை அண்டையிலே தலைப் பக்கத்திலே ஒரு கல்லும் இடுப்பின் கீழே ஒரு கல்லும் கால் பக்கத்திலே ஒரு கல்லும் வைத்துக்கொண்டு சம்பங்குடையை மேலே மூடிக்கொண்டு தன் கீழே ஓடுகிற வெள்ளத்திலே தலைமயிர் அலைய நித்திரை செய்துகொண்டிருந்தான்.

இராயர் பார்த்து ஆச்சரியப்பட்டு “இவன் உயிரோட இருக்கிறானோ” என்று கேட்டார். அதற்கு அப்பாச்சி, இறந்துபோகவில்லை. அதிக நித்திரையில் இருக்கிறான்” என்றான்.

அதைக்கேட்டு, “ஒருவனுக்கு இப்படிப்பட்ட மழை வெள்ளத்திலே தலைமயிர் நீரில் அலம்பக் கீழே வெள்ளம் ஓடக் கல்லுகள் உடம்பிலே உறுத்த நித்திரை பிடிக்குமா?” என்று கேட்டார். அதற்கு அப்பாச்சி “உத்தியோகத்துக்குத் தக்க சுகம்” என்றான்.

இராயர் சோதிக்கும்படியாக அந்த முரட்டிடையனைத் தன் அரண்மனைக்கு அழைப்பித்து, பெரிய உத்தியோகம் கொடுத்துப் போசனம், வஸ்த்திரம், ஆபரணம், வாகனம் இவை முதலாகிய இராசோபசாரங்கள் தனக்கு

நடந்துவருகிறதிலும் அவ்விடையனுக்குத் தான் அதிகமாக நடந்துவரும்படியாகத் திட்டம் செய்து, வெய்யில். காற்று, மழை, பனி இதுகளால் யாதொரு வருத்தமும் இல்லாமல் அவனைச்சிலகாலம் வைத்திருந்து அதன் பின்பு அவன் வீட்டு வாசற்படியிலே பச்சை வாழைப்பட்டைகளைப் போட்டு வைத்தார். அவன் அதன்மேலே நடந்து உள்ளே போனமாத்திரத்திலே அவனுக்குத் தோசமுங் காய்ச்சலுங்கண்டு மிகவும் வருத்தப் பட்டான். இராயர், அப்பாச்சி சொன்னது சரிதான் என்று சந்தோஷப்பட்டு ஒரு வைத்தியனைக் கொண்டு குணப்படுத்திவிட்டார்.



மூன்றாவது

இவளுக்கும் ஒரு புருஷன் இருப்பான் என்றது

இராயரும் அப்பாச்சியும் ஒருநாள் சாயங்காலம் ஒரு வீதியிலே வேடிக்கையாகப் போகையில் ஒரு திண்ணையின் மேலே ஒருத்தி குரூபியாகவும் சமீபத்து வந்தவரெல்லாம் அசங்கியப்படத்தக்க கெட்ட நாற்றமுடையவளாகியும் பூரண கெற்பமுடையவளாகியும் படுத்துக்கொண்டு இருக்கிறதை இராயர் கண்டு, "இவளையும் ஒருவன் சேருவானா?" என்று கேட்டார். அதற்கு அப்பாச்சி, இவளுக்கும் ஒரு புருஷன் இருப்பான்" என்று சொன்னான். "அவன் எப்படிப்பட்டவனோ அவனைப்பார்க்க எனக்கு இச்சையுண்டாயிருக்குது" என்று சொன்னார். அப்புறம் கொஞ்சதூரம் போகையில் நல்ல வேஷ்ட்டியும் தலைப்பாகையும் சொக்காயும் உத்தரியமும் உடையவனாகக் கையிலே வெற்றிலை பாக்கு வைத்துக்கொண்டு வருகிற ஒருவன் கையிலிருந்த உலர்ந்த சுண்ணாம்புக்கு ஈரமுண்டாக்கத் தெருச் சாக்கடை நீரை அருவருப்பில்லாமல் அள்ளிவிட்டுக் கொண்டான். அதை அப்பாச்சி பார்த்துச், "சுவாமி இவன்தான் அவளுக்கு நாயகம்" என்றான்.

அதைச் சோதிக்க அவனுக்குப் பின்னாலே திரும்பி வந்தார்கள். அவன் சரேலென்று போய் அவள் பக்கத்திலே உட்கார்ந்து அவளுக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்துச் சரசம் செய்துகொண்டிருந்தான். அதைக் கண்டு இராயர் அப்பாச்சியின் புத்தி நுட்பத்தை மிகவும் மெச்சினார்.

நான்காவது

உமிழ்ந்த வாய்க்கு முத்தம் உதைத்த காலுக்குத் தண்டைச் சதங்கையுமிட வேண்டுமென்றது

ஒருநாள் இராயர் பெண்சாதி, அப்பாச்சி உத்தியோகத்திற்கு மற்றொருவனைக் கொண்டுவந்துவிட்டு இராயருக்குச் சிபாரிசு செய்தாள். இராயர், "அப்பாச்சி வல்லமை இவனுக்குண்டா?" என்று கேட்டார். அதற்கு அவள் "அதிகமாகவே இருக்குமென்று நினைக்கிறேன்" என்றாள். ஆனால் அறிக்கை செப்புவோமென்று சொல்லி அவனுக்குப் போகும்படியாக உத்தரவு கொடுத்தார். பின்பு ஒருநாள் இராத்திரி அந்தப்புரத்திலே இராயர் குழந்தை அவர் மார்பிலும் முகத்திலும் காறி உமிழ்ந்து, கால்களால் உதைத்து விளையாடிக் கொண்டிருந்தது. சூரியோதயமான பின்பு இராயர் அப்பாச்சி உத்தியோகத்துக்கு வந்த மனிதனை அழைப்பித்து அவனைப் பார்த்து, "இராத்திரி ஒருவன் வந்து என் முகத்திலும் மார்பிலும் காறி உமிழ்ந்து, காலாலுதைத்தான். அவனுக்கு என்ன செய்யலாம்?" என்றார். அவன் உலகத்துக்கெல்லாம் தலைவனா யிருக்கிற உங்களை இப்படி அலட்சியம் செய்தவன் வாயிலே ஈயத்தை உருக்கி வார்த்துக் கால்களை வெட்டிவிடவேணும் என்றான். அவனை அப்புறம் போகச்சொல்லி, அப்பாச்சியை அழைப்பித்து முன் அவனைக் கேட்டபடி கேட்டார்.

அதற்கு அப்பாச்சி, "உதைத்த பாதம் எதுவோ அதுக்குப் பொன் சதங்கையும் தண்டையும் போட்டு உங்கள்மேலே உமிழ்ந்த வாய் எதுவோ அதை முத்தமிட்டுக் கொள்ளவேணும்" என்றான்.

அதன்பின்பு இராயர், "நீ சிபாரிசு செய்த மனுசனை அப்பாச்சியிலும் உயர்ந்தவன் என்று புகழ்ந்தாயே! இவ்விருவர் விவேகத்தையும் பார்த்தாயா" என்று கேட்டார்.

அதனை ஒரு பரீக்ஷையிலே தானே எப்படி நிச்சயிக்கலா மென்றாள்.

ஐந்தாவது

இகழ்ச்சியாகக் கொண்டதனைப் புகழ்ச்சியாகக் காட்டியது

ஒருநாள் இராயர் அரசசபையிலே ஆடல் பாடல்களிலே வல்லவர்களாகிய மூன்று பேர் தாசிகள் தெற்கேயிருந்து வந்து தங்கள் வித்தையினுடைய அருமை பெருமைகளைக் காண்பித்தார்கள். இராயர் அவர்களைப் பார்த்து மெச்சி வெகுமதிகள் செய்தார். அந்த மூன்று பேரில் ஒருத்தி இந்த மகாராசாவின் குணம் வேரும் விறகும்படி என்றாள். மற்றொருத்தி முள்ளும் முரடும்படி என்றாள். வேறொருத்தி கல்லும் கரடும்படி என்றாள். இராயர்தன் பெண்சாதி சிபாரிசு செய்த மனுசனை அழைத்து, "இவர்கள் சொன்னதற்கு நாம் செய்யவேண்டிய தென்ன?" என்று கேட்டார்.

"இராசாதிராசராகிய தங்களை இப்படித் தூஷணமாகச் சொன்னபடியால் இம்முன்று பேரையும் மொட்டையடித்துத் துரத்திவிடவேண்டும்" என்றான்.

அப்பாச்சியை அழைத்துக் கேட்டதற்கு, "சாமி அவர்கள் சொன்ன வாக்கியங்கள் தூஷணமல்லவென்றும், விறகு மென்றது விறகைப் போலவும் வேருள்ளதாயுமிருக்கிற அடிக்கரும்பைப் போல மதுரமுள்ள குணமென்றதாம். முள்ளு முரடுமென்றது முள்ளையும் முரட்டு ரூபத்தையுமுடைய பலாப்பழத்தைப் போல ருசியுள்ள குணமென்றதாம், கல்லுங் கரடுமென்றது கல்லு ரூபமாகவும் கரடாயுமிருக்கிற கற்கண்டைப் போலச் சுவையுள்ள குணமென்றதாம். ஆகையால் உங்களுடைய நிசமான சுகுணத்தைப் புகழ்ந்ததற்காக அதிக வெகுமதி செய்ய வேண்டும்" என்றான்.

இராயர் சந்தோஷித்து அவ்விருவர் சொன்னதையும் பெண்சாதிக்கறிவித்தார். அவள், இன்னும் ஒரே ஒரு பரீக்ஷை செய்தாலொழிய எனக்குச் சந்தேகந் தீராது என்றாள்.

ஆறாவது

மயிரும் சாம்பலும் பிற அரசர்களுக்குக் கொடுத்தது

ஒருநாள் இராயர் அந்தப்புரத்திலே தன் பெண்சாதியைப் பார்த்துப் பக்கத்திலே வைத்துக்கொண்டு மயிருஞ் சாம்பலும் வைத்து இரண்டு பொட்டணங்களில் அவள் சிபாரிசு செய்யவன் கையில் ஒரு பொட்டணத்தைக் கொடுத்து, "கன்னட தேசத்து ராசா கையில் இதைக் கொடுத்துக் கண்டு கொண்டுவா" என்று அனுப்பினார். மற்றொரு பொட்டணத்தை அப்பாச்சி கையில் கொடுத்து, தெலுங்கு தேசத்து ராசா கையில் கொடுத்துக் கண்டு கொண்டு வரச்சொல்லி அனுப்பினார். அதைச் சிபாரிசுக்காரன் கன்னட தேசத்துக்குப்போய் அதை அவ்வரசன் கையில் கொடுத்து, "இராயர் உமக்குக் கொடுத்துவரச் சொன்னார்" என்றான். அதை அந்த ராசா பிரித்துப் பார்த்து, "இதுவென்ன?" என்று கேட்டான். "எங்கள் இராயர் எமது அரசாட்சிக்கு முன்னே நீயும் இராசாவென்று பேர் வைத்துக்கொண்டிருக்கிறதைவிடச் சாம்பலைத் தொட்டுக் கொண்டு மயிரைப் பிடுங்கிச் சீவனம் செய்யலாகாதா என்று தெரிவிப்பதற்கு அடையாளமாக அனுப்பியது போலத் தோன்றுகின்றது" என்றான். அந்தச் சொல்லைக் கேட்ட மாத்திரத்திலே கோபம் பிறந்து கண்கள் சிவந்து அந்தக் கன்னட தேசத்தரசன் தன்னுடைய சேனைகளைக் கூட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தான்.

அப்பாச்சி அந்தப் பொட்டணத்தைப் பிரித்து பார்த்து இரத்தினமிழைத்த தங்கப்பேழையில் வைத்துப் பட்டுச்சீலை சாத்திப் பல்லக்கு மேல் வைத்து சத்திர சாமர நிர்த்த கீதவாத்தியத்துடன் கொண்டுபோய் தெலுங்கு தேசத்து

இராசாவைக் கண்டு, "இராயவர்கள் ஒரு யக்ஞம் பண்ணி விபூதியும் யக்ஞ பசு ரோமமும் ஆகிய பிரசாதம் உம்முடைய க்ஷேமத்துக்கு அனுப்பினார்" என்றான். அதை அவன் வாங்கிகொண்டு சந்தோஷமடைந்து, அப்பாச்சிக்குச் சகல வெகுமதியும் செய்து இராயருக்கு அனேக வெகுமதிகளும் கொடுத்துத் தன்னுடைய ஆனை, சேனை பரிவாரங்களையும் கூட்டி அப்பாச்சியைக் கொண்டுபோய் இராயரிடத்தில் விட்டுவரச் சொல்லி அனுப்பினான். அப்பாச்சி வருகிறதற்கு முன்னே கன்னட தேசத்து ராசாவினுடைய தண்டு வந்து கோட்டையைச் சுற்றிக்கொண்டு சண்டைக்கு ஆரம்பித்தது. இராயர் அந்தத் தருணத்தில் அப்பாச்சி இல்லையென்று எண்ணமிட்டுக் கொண்டு இருக்கையில் அப்பாச்சி வந்துவிட்டான். அவன் பின்னே வந்த சேனையும் தன் சேனையும் கூடிக்கொண்டு இராயர் சண்டை பண்ணிக் கன்னட தேசத்து இராசாவைத் துரத்திவிட்டார்.

இராயர் பெண்சாதி நடந்த வர்த்தமானங்களைக் கேட்டு வெட்கப்பட்டு இராயரைப் பார்த்து, "நான் ஒரு மூடனைக் குறித்து சிபாரிசு செய்த குற்றத்தை க்ஷமிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

ஏழாவது

குடப்பூசணிக்காயும் நடக்கீரையும் குழிக்கிணறும் அனுப்பியது

டில்லி பாச்சாவானவன் இராயரிடத்திலிருக்கிற அப்பாச்சி யினுடைய உயரிய தந்திரங்களையும் உத்தி விசேஷங்களையும், புத்தியினுடையத்தையும் கேள்விப்பட்டு அதைப் பரிசோதிக்கும் படியாகக் "குடப்பூசணிக்காயும், நடக்கீரையும் குழிக்கிணறும் சீக்கிரத்தில் அனுப்பவேணும்" என்று இராயருக்கு எழுதி அனுப்பினான். அந்த நிருபம் இராயரிடத்திற்கு வந்தது. அவர் படித்துப் பார்த்து அப்பாச்சிக்குக் காண்பித்தார்.

அப்பாச்சி அப்படியே செய்வோமென்று சொல்லிவிட்டுப் போய் ஒரு பூசணிப் பிஞ்சைக் குடத்துக்குள்ளே விட்டு வளர்த்து அது குடத்துக்குள்ளே தானே பருக்கும்படி செய்து, ஒரு வண்டியின் மேலே முழ உயரம் மணல் பரப்பிப் பாத்தி கட்டிக் கீரை விதைத்து, அந்தக் குடத்தையும், வண்டியையும் இராயரிடத்தில் கொண்டுபோய்க் காட்டி, இதுகளைப் பாச்சாவுக்கு அனுப்பி "இத்தேசத்திலிருக்கிற குழிக்கிணறு அத்தேசத்திற்குப் புதிதென்பதால் அத்தேசத்துக் கிணறுகளிலேயே ஒன்றை அனுப்பினால் பிணைபோட்டு அனுப்புகிறோம்" என்று எழுதி அனுப்பச் சொல்லிச் சொன்னான்.

இராயர் சந்தோஷப்பட்டு அப்படியே செய்தார். பாச்சா இந்த ஓலையையும், பூசணிக்காய்க் குடத்தையும், கீரை வண்டியையும் பார்த்து மிகவும் அப்பாச்சியின் வல்லமையை மெச்சிக் கொண்டான்.

எட்டாவது

விக்கிரகங்களைப் பரீக்ஷித்தது

டில்லி பாச்சா மறுபடியும் அப்பாச்சி வல்லமையை அறிதற் பொருட்டு ஒரேவிதமான மூன்று விக்கிரகங்களையும் இதுகளில் எதைப்போல இருக்கிறவன் உத்தமன், எதைப்போல இருக்கிறவன் மத்திமன், எதைப்போல இருக்கிறவன் அதமன். பரீக்ஷித்து அந்தந்த விக்கிரகத்தின் மேலே எழுதி அனுப்புகிறது என்று எழுதி ஒரு தாக்கீதையும் இராயருக்கு அனுப்பினான். இராயர் நிரூபத்தை வாசித்துப் பார்த்துச் சபையார்க்கெல்லாம் அந்த விக்கிரகங்களைக் காண்பித்துக் குணாகுணங்களைச் சோதிக்கச் சொன்னார்.

மூன்றும் ஒரே மாதிரியாயிருக்கிறபடியால் அதுகளவபேதம் கண்டுபிடிக்கமாட்டாமல் மயங்கினார்கள். அப்பாச்சி அந்த விக்கிரகங்களுடைய கரசரணாதி அவயவங்களை எல்லாம் உற்றுப் பார்த்துக் காதுகளிலே சிறு துளைகள் இருக்கின்றதை அறிந்து மெல்லியிறத்தை* அத்துளைகளிலே நுழைத்துப் பார்த்தான்.

நுழைத்துப் பார்க்கும் அளவில் அளித்தது வாய் வழியாகப் புறப்பட்டது. மற்றொன்றற்கு மற்றொரு காதில் வழியாகப் புறப்பட்டது. மற்றொன்றற்கு வழிப்படாமல் உள்ளே போய்விட்டது. உள்ளே போய்விட்டதைப் போலக் கேட்ட சமாசாரத்தை உள்ளடக்குகிறவன் உத்தமன் என்றும்,

---

★ ஓலைச்சுவடியில் உள்ள இச்சொல் கொண்டுள்ள பொருள் புலப்படவில்லை. மெல்லிய இறகு அல்லது ஈர்க்கு என்பதைக் குறிக்கலாம்.

மற்றொரு காதின் வழியாகச் சென்றதைப் போல் தான் கேட்ட சேதியை மற்றொருவன் காதின் வழியாகச் செலுத்துகிறவன் மத்திமன் என்றும், வாயின் வழியாகப் புறப்பட்டதைப் போலத் தான் கேட்ட சங்கதியை அடக்காமல் வெளியே கொட்டிவிடுகிறவன் அதமனென்றும் நிச்சயித்து அந்தப்படியே அந்தந்தப் பதுமைகளுக்கு மேல் எழுதி அனுப்பிவிடச்சொன்னான்.

இராயர் அதிக சந்தோஷத்துடன் பாச்சா இடத்துக்கு அனுப்பிவிட்டார்.

ஒன்பதாவது

பாச்சா அனுப்பிய தாசியை வென்றது

டில்லி பாச்சாவானவன் திரும்பியும் அப்பாச்சி சாமர்த்தியத்தைப் பரீக்ஷிக்கும் பொருட்டாகப் பரத சங்கீதங்களிலே கெட்டிக்காரியாகிய ஒரு தாசியை அழைத்து, அவளுக்கு வேண்டிய பணங்களைக் கொடுத்து "நீ இராச சபைக்குப் போய் இன்னவிதமாக அவனை மானஞ்செய்துவா" என்று அனுப்பினான்.


அவள் அப்படியே சம்மதித்து இராயர் சபைக்கு வந்து சபையாருக்கும் இராயருக்கும் அனேகவிதமான நாட்டியங்களைச் செய்து அனேகவிதமான கீர்த்தனைகளைப் பாடினாள். இராயருக்கு அவள்மேலே அதிக விசுவாசம் பிறந்தது. "உனக்கு வேண்டுவதைக் கேளு, யாதொரு தடையுமில்லாமல் கொடுப்பேன்" என்றார்.

அதைக்கேடடு, "சத்திய சுரூபியாகிய என் ஆண்டவரீர் எனக்கு மற்றொன்றும் வேண்டுவதில்லை. உங்கள் சிங்காசனத்தின் மேலே ஒருதரம் மலபாதை செய்யும்படியாக ஒருவரம் மாத்திரம் அனுக்கிரகம் செய்யவேணும்" என்று கேட்டாள்.

இராயர் அந்தச் சொல்லைக் கேட்டு மிகவும் விசனத்தை அடைந்து, சற்று நேரம் ஆலோசித்து, தான் சொல்லிவிட்ட சொல்லைக் காப்பாற்ற வேணுமென்று தீர்மானித்து, "நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன். நாளைக்கு வந்து அப்படியே செய்" என்று அவளை அனுப்பிவிட்டு, அப்பாச்சியை அழைப்பித்து நடந்த சங்கதியைச் சொன்னார்.

அப்பாச்சி, "நீங்கள் இதற்கு அஞ்சவேண்டுவதில்லை. நான் ஒரு உபாயஞ் செய்து அந்தத் தாசியைத் துரத்திவிடுகிறேன்" என்று மறுநாள் உதையத்துக்கு அந்தத் தாசி வந்த உடனே அவளைப் பார்த்து, நீ இந்தச் சிங்காசனத்தின் மேலே இராயரவர்கள் உத்தரவு கொடுத்தபடி மலபாதை மட்டுமே செய்யவேணுமேயல்லாமல் சலபாதை முதலானதுகள் செய்வாயேயானால் அச்சணமே சிரச்சேதம் என்று சொன்னான்.

அப்பாச்சி சொன்னபடி செய்வது முடியாத காரியமாயிருந்த படியாலே அவள் வெட்கி, அவமானப்பட்டுப் போய்விட்டாள். இராயர் அதுகண்டு அளவற்ற சந்தோஷத்தை அடைந்தார்.



பத்தாவது

பாச்சாவின் மந்திரியை வென்றது

ஒரு முரட்டுத் துலுக்கச் சேவகன் மழைக்காக ஒரு வீட்டுத் திண்ணையில் ஒதுங்கி உட்கார்ந்தான். அவன் பக்கத்திலே ஒரு க்ஷயரோகி வந்து உட்கார்ந்தான். இரும்பினான்.

அந்த துலுக்கன், அடா! இங்கே இரும்பாதே! என்றான். மறுபடியும் இரும்பினான். அந்த மூடன் கோபத்துடனே கத்தியை உருவிக்கொண்டு அந்த நோயாளியை ஒரே வெட்டாகத் துண்டித்தான். அதைக்கண்டு சமீபத்திலிருந்த எல்லோரும் கூடிப்பிடித்துக் கொண்டுபோய் இராயரிடத்திலே ஒப்புவித்தார்கள்.

இராயர் அவனை, "ஏன் வெட்டினாய்?" என்று கேட்டார். அவன், "இரும்பாதே" என்று சொன்னேன். என் பேச்சைத் தள்ளிக்கொண்டு இரும்பினான் அதனாலே வெட்டிப் போட்டேன் என்றான்.

இராயர் அந்த முரட்டுத்தனமான பேச்சைக் கேட்டுச் சிரித்து, அப்பாச்சியைப் பார்த்து, "இவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?" என்று கேட்டார்.

இவனை ஒன்றும் செய்யாமல் காவலில் வைத்து நாள்தோறும் இரண்டு சேர் மாமிசமும், ஒருசேர் நெய்யும், அதற்குத்தக்க சாமான்களுமாகக் கொடுத்துச் சாப்பிட்டுக் கொழுப்பேறும்படி செய்துவந்தால் நல்ல தருணத்துக்கு உதவுவான்" என்று சொன்னான்.

அப்படிச் செய்துகொண்டு வருகிற காலத்தில் ஒருநாள் பாச்சாவானவன் தன்னுடைய மந்திரிகளை நோக்கி, "மதியூகி அப்பாச்சியினுடைய வல்லமையினாலே இராயன் நமக்குக் கீழ்ப்பட்ட பகுதி கட்டாமல் இருக்கிறான். அவனைச் செயிக்கிறதுக்கு யாருக்காவது வல்லமையுண்டாயிருந்தால் சொல்லுங்கள்" என்று கேட்க, அவர்களிலொருவன், "நான்

செயித்து வருகிறேன்" என்றுசொல்ல, அவனுடனே தன்னுடைய திறமையான சேனைகளைக் கூட்டி இராயரைச் செயித்துவரும்படி அனுப்பினான். அவன் இராயருடைய பட்டணத்துக்குச் சமீபத்தில் வந்திறங்கித் தான் வந்த சேதியைத் தூதர்களாலே இராயருக்குத் தெரிவித்தான். அப்போது இராயர் தம்மருகிலிருந்த அப்பாச்சியைப் பார்த்து, "இவன் ராட்சதனைப் போலும் மகாதுஷ்டனாயும் மிகுந்த உபாயக்காரனாயும் அதிக சேனைகளோடு கூடி வந்திருக்கிறானே! இனி இப்படிப்பட்ட விபரீதம் ஒருநாளுமில்லையே. இதற்கென்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

அதற்கு அப்பாச்சி முன்னாலே கொழுப்பேற வைத்திருந்த முரட்டுத் துலுக்கனை அழைப்பித்து, "நான் எவ்வளவு? இப்பஞ்சணையின் மேலே இப்படியாகத் தண்டெடுத்துக்கொண்டு வரலாமா? நான் பகுதிப் பணத்தைச் செலுத்திப் போடுகிறேன்" என்று இராயரைக் கொண்டு சமாதானக் கடுதாசி எழுதிவைத்து, அந்த முரடன் கையிலே கொடுத்துப் பாச்சாவின் மந்திரியிடத்துக்கு அனுப்பினான்.

அவன் அந்த சமாதானக் கடுதாசியைக் கையிலே பிடித்துக்கொண்டுபோய் மந்திரி கையிலே கொடுத்தான். அதை மந்திரி வாங்கிப் படித்துப் பார்த்து எவ்வளவு சௌரியமில்லாத இந்தப் பஞ்சையின் மேலே தண்டெடுத்து வந்தோமென்று இராயரை இகழ்ந்து காறிக் கிழே உமிழ்ந்தான்.

அந்த முரட்டுத் துலுக்கன் தன்னை நிந்தித்துக் காறி உமிழ்ந்தானென்று எண்ணிக்கொண்டு தன் கத்தியினாலே மந்திரியை இரண்டு துண்டாக வெட்டிப்போட்டான். அவன் பக்கத்திலே இருக்கிறவர்கள் அந்த முரடனை வெட்டிப் போட்டார்கள். மந்திரி இறந்து போகவே தண்டு முரிந்து போய்விட்டது.

இராயர் அப்பாச்சி யுத்தியை மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்.

பதினொன்றாவது

அப்பாச்சி இராயரை மீட்டுக்கொண்டு வந்தது

பாச்சாவானவன், அப்பாச்சி துணையாயிருக்கிறவரைக்கும் இராயரைச் சண்டை பண்ணி வெல்லக் கிட்டாது. ஆகையால் மோசம் செய்து வெல்லவேணுமென்று நினைத்து விலை உயர்ந்தவைகளாக ஆயிரம் குதிரைகளுடன் ஆயிரம் சேவுகர்களை ஆயுதங்கள் மறைத்துக்கொண்டு குதிரை விற்கிறவர்கள் போலே பொய்வேசம் செய்து இராயரைப் பிடித்துக் கொண்டுவரும்படி அனுப்பினான். அவர்கள் அந்தக் குதிரைகளைக் கொண்டுபோய், இராயர் பட்டணத்திற்குக் காதவழி தூரத்தில் இறங்கி, இராயருக்குச் சமாசாரம் அறிவித்தார்கள்.

இராயர், ஒருநாள் சாயங்காலம் சிலபேர் குதிரைப் பரீக்ஷைக்காரரை வீட்டுக்குக் கூட்டிவந்து குதிரைகளைப் பார்த்து, "இந்தக் குதிரைகள் என்ன விலை?" என்றார்.

"ஒவ்வொரு குதிரை(யும்) ஆயிரம் வராகன். எல்லாம் ஒரே மாதிரி நடையாகையால் ஒரு விலைதான். நீங்கள் பரீக்ஷ பண்ண வேண்டுமானால் ஒரு குதிரையின் மேலேறிக்கொண்டு சவாரி பண்ணுங்கள். மற்ற குதிரைகளையெல்லாம் அதற்குச் சரியாக விட்டுக்கொண்டு இருக்கிறோம் பாருங்கோள்" என்றார்கள்.

அப்படியே ஒரு குதிரையின் மேலேறிக் கொண்டு சவாரி விட்டார். மற்றக் குதிரைக்காரர்களெல்லாம் அவனவன் குதிரை மேலேறிக்கொண்டு நாலு நாழிகை வழி போனபின்பு இராயரை ஒரு பல்லக்குள்ளே எடுத்துப் போட்டுக்கொண்டு, பாச்சாவிடத்திற்குக் கொண்டுபோய்விட்டார்கள்.

அப்பாச்சி அதைக் கேள்விப்பட்டு ஒரு உபாயம் தனக்குள்ளே ஆலோசித்து அறிந்து பயித்தியக்காரனைப்

போல வேஷம் போட்டுக்கொண்டு பாச்சாவின் பட்டணத்துக்குள்ளே போய், "நானே அப்பாச்சி எங்கள் இராயரை இட்டுக்கொண்டு பாச்சாவைப் பிடித்துக் கொண்டுபோக வந்திருக்கிறேன்" என்று எல்லோரும் கேட்கும்படியாகச் சொல்லி ஓகோவென்று கூவி எழும்பிக் குதித்துக் கொண்டு திரியத் தொடங்கினான்.

இப்படியே பாச்சாவின் சபைக்கு முன்னேயும் அவர் சவாரி போகிற இடங்களிலேயும் மந்திரி முதலானவர்கள் வீட்டுக்கு முன்னேயும் மற்றும் பலவிடங்களிலேயும் சொல்லிக்கொண்டு இருக்கையில், ஒருநாள் பாச்சாவானவன், இவன் உண்மையாகவே பயித்தியக்காரனோ அல்லது திருட்டு வேஷக்காரனோ? இதை அறிவிக்கவேண்டுமென்று சேவுகர் சிலரை, "இவன் எங்கே சாப்பிடுகிறான்? இவனை அறியாமல் இவன் பின்னே போய்ச் சோதித்து வாருங்கோள் என்று அனுப்பினான்.

வேஷக்காரன் இராத்திரிப் பத்து நாழிகைக்குமேல் பிச்சை எடுத்து அரிசியும் ஒரு பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு சுடுகாட்டுக்குப் போய் ஓரடுப்பு வைத்துப் பிணம் வேகுற கொள்ளியதாலே சோறாக்கிக் கொண்டிருக்கும்போது சேவுகர் வந்து இருக்கிறதோ எப்படியோ தெரிந்து அங்கேயும் அப்படியே கூவிச் சோற்றுப்பாத்திரத்தை உடைத்துவிட்டு ஓடிப் போனான்.

அச்சேவுகர் போய்ப் பாச்சாவுக்குத் தெரியப்படுத்திப் பயித்தியக்காரனென்றே நிச்சயித்துக்கொண்டான். பின்பு அப்பாச்சி ஒரு பெரிய கப்பலின் மேலே சில விலையுயர்ந்த ரெற்றினங்களை (இரத்தினம்) ஏற்றிக்கொண்டு விற்கிறதற்குக் கொண்டு வருகிறதுபோலக் கொண்டுவரும்படி எழுதியனுப்பினான்.

அப்படியே கப்பலில் கொண்டுவந்தவர்கள் சில இரத்தினங்களை எடுத்துக்கொண்டுபோய் பாச்சாவிடம்

காண்பித்தார்கள். பாச்சா இரத்தினப் பரீக்ஷைக்காரரைக் கொண்டு மதித்த விலைக்கு அவர்கள் அதிகமாகச் சொல்லி, இப்படிப்பட்ட இரத்தினங்களை விலைமதிக்க இராயரொருத்தருக்கே தகுமேயல்லாமல் மற்றபேருக்குத் தகுமோ என்றார்.

அதை அப்பாச்சா கேட்டு, "உங்களிடத்திலின்னம் இருக்கின்ற இரத்தினங்களை எல்லாம் கொண்டுவாருங்கள்" என்றான். அதற்கு வர்த்தகர், நாங்கள் கொண்டு வந்திருக்கிறபடியால், நீங்களே அங்கு வந்தால் பார்த்து உங்களுக்கு வேண்டியவைகளை எடுத்துக் கொண்டுவரலாம்" என்றார்கள்.

"அப்படியே ஆகட்டும்" என்று பாச்சா இராயரையும் இன்னம் சிலர் தன் பரீட்சைக்காரரையும் இட்டுக்கொண்டு கப்பலுக்குப் போனார். பயித்தியக்காரனும் பாச்சாவின் பின்னே தன் வழக்கப்படி சொல்லிக்கொண்டு கூடப்போகக் கப்பலிலேறி அங்கேயும் அப்படியே கூவிக்கொண்டிருந்தான்.

அத்தருணத்தில் கப்பற்காரர்கள் நங்கூரத்தைத் தூக்கிப் பாயை விரித்துவிட்டார்கள். கப்பல் இராயரை சீமையில் வந்து சேர்த்தது.

பாச்சாவை இராயர் அரண்மனைக்கு இட்டுக்கொண்டுபோய் வெகுமரியாதைகள் செய்து சிலநாள் வைத்துக்கொண்டு இருந்தார்கள். பாச்சா, தனக்குச் செய்த மோசத்தை அறிந்து, அப்பாச்சி புத்தியுக்திகளை மெச்சிக்கொண்டு இராயபைப் பார்த்து, இனிமேல் உன் சோலிக்கு வருகிறதில்லை என்று உத்தரவு கொடுத்துவிட்டுப் போய்விட்டான். இராயர் அப்பாச்சியைத் தழுவிக்கொண்டு, "நீயே என் பங்குக்குத் தெய்வம்" என்று கொண்டாடினார்.

பனிரெண்டாவது

கற்றறி மோழை முதலான பொருள்களைச் சம்பாதித்தது

ஒருநாள் இராயர் தமது மந்திரியாகிய அப்பாச்சியை அழைத்து, "கற்றறி மோழை, கைநட்புச் சேவகன், தாசியிற் சாதி, சாதியிற் றாசி, ஊர்திரிகின்ற நாய், மனிதரிற் கழுதை, சிம்மாசன மேறுகின்ற கடா இவ்வேழும் உன்னாலே சம்பாதிக்கக் கூடுமா?" என்று கேட்டார். அதற்கு அப்பாச்சி சம்மதித்து உத்தரவு ஏற்றுக்கொண்டு வேறொரு இராசாவின் பட்டணத்தில் ஒரு பண்டிதரிடத்திலே போய் நாலாயிரம் வராகன் கொடுத்து நான் கேட்கும் சமயத்தில் கொடுவென்று சொல்லிப் பின்பு ஒரு தாசியினிடத்திற்குப்போய், ஒரு இராத்திரிப் படுக்கைக்கு நீ என்ன கேட்பாயென்று கேட்கத் தாசி "ஒரு இராத்திரிக்கு ஆயிரம் வராகன் கொடுக்கவேணும்" என்றாள்.

அதற்கு அப்பாச்சி சம்மதித்துக் கொடுத்துப் படுக்க வீட்டுக்குப் போகும்போது அவளுடனே "நானுன்னைக் கூடினவுடனே இந்தக் கட்டாரியினாலே உன்னைக் குத்திக் கொன்னுபோடுவேன்" என்று சொன்னான்.

அதற்குத் தாசியும் ஆயிரம் வராகனை வாங்கிக் கொண்டு, "என்னுடைய தேகத்தை இந்த இராத்திரியிலே உம்முடைய இஷ்டப்படி செய்யலாம்" என்றாள்.

அப்பாச்சி "எனக்கு இஷ்டமான நாளில் வருவேன்" என்று சொல்லி, அவளிடத்திலேயிருக்கும் நாய்க்குத் தன் கையிலிருந்த பலகாரத்திலே கொஞ்சம் போட்டு, அப்புறம் இராசவீதியிலே போகும்பொழுது, அப்ப இராசாவின் குமாரத்தி அப்பாச்சியைக் கண்டு அவன் அதிரூபவானாக இருக்கையில் அப்பொழுதே தகப்பனிடத்தில்போய், "எனக்கு இஷ்டமான புருஷனை நான் கலியாணம்

பண்ணிக்கொள்ள நீர் சம்மதித்தபடி இப்பொழுது நான் கண்ட புருஷனுக்கு என்னைக் கலியாணம் பண்ணிக்கொடும்" என்று சொல்லத் தகப்பன், அப்படியே அப்பாச்சிக்குத் தன் குமாரத்தியைக் கலியாணம் பண்ணிக்கொடுத்தான். இராத்திரி படுக்கைக்குப் போனபோது பெண்சாதியொடு, "உன்னோடு கூடினவுடனே இந்தக் கட்டாரியால் குத்திப்போடுவேன்" என்று சொல்ல, அவள் "கூகூ" என்று பயந்து கூவினாள். அவள் தகப்பனாகிய இராசா அந்தக் கூச்சலைக் கேட்டுத் தன் குமாரத்தியிடத்திற்கு விசாரிக்க அவள், தன் புருசனாகிய அப்பாச்சி சொன்னதைச் சொல்லினாள். அப்போது இராசா மந்திரியுடனே, "இதற்கென்ன செய்யலாம்?" என்றான்.

அரசன் அப்படியே கொலைசெய்ய அவனுக்கு உத்தரவு கொடுத்தான். அவன் கட்டியிழுத்துக்கொண்டு போகையில் அந்தச் சேவுகர்க்கு அனேக உபசாரம் சொல்லி, "இந்த ராசாவுடனே ஒரு பேச்சு ருசுவிலே பேசவேணும். அதற்குச் சாவகாசம் கொடுங்கள்" என்று கேட்டான். "கூடாது" என்று இழுத்துக்கொண்டு போனார்கள். பண்டிதன் வீடண்டையிலே போம்பொழுது அவனை அழைத்து, "என் நாலாயிரம் வராகனையும் கொடு" என்று கேட்க, இவனுக்குச் சிரசாக்கினை வந்ததை அறிந்து அவன், "உன்னைக் கண்டவனார்? உன் வராகனை கண்டவனார்? போ" என்றான். அப்பால் தாசி வீட்டண்டையிலே போகும்போது அங்கிருந்த நாய் அப்பாச்சியைப் பார்த்து வீட்டுக்குள்ளே நுழைந்து தாசி காலைச் சுற்றிக் கூவித் தெருவிலே அழைத்துக்கொண்டுவந்தது. அந்தத் தாசி அப்பாச்சியைப் பார்த்து நடந்த வர்த்தமானங்களை விசாரித்து அந்தச் சேவுகர்க்கு இரண்டு நாழிகை வரைக்கும் சொல்லாமல் வைத்திருக்கும்படியாகப் பேர்க்கு நூறு நூறு வராகன் கொடுத்து இராசாவிடத்திற்குப் போய்ச் சொல்லி, "நீங்கள் உத்தரவு கொடுத்தவனை அழைப்பித்து அவன் வாய்ப்பிறப்பு விசாரித்துச் செய்தால் நல்லது" என்றாள். அப்படியே இராசா

அவனை அழைப்பித்து விசாரிக்குமளவில், "இராயர் அருமையான சில பதார்த்தங்களைச் சம்பாதிக்கும்படி அனுப்பினார். என் அதிர்ஷ்ட்ட வசத்தினாலே உமது பட்டணத்திலே தானே அவைகளெல்லாம் கிடைத்ததுகள். ஆகையால் அந்தச் சமாசாரத்தை இராயரவர்களுக்கு அறிவிக்க உத்தரவு கொடும்" என்று கேட்டான்.

அவ்வரசன், இராயரால் அனுப்பப்பட்டவனென்றபடியால் அஞ்சி அப்பாச்சிக்கு வெகுமரியாதை செய்து அனுப்பினான். அப்பாச்சி இராயரிடத்துக்குப்போய் நடந்த சேதியெல்லாம் ஆதி அந்தமாகச் சொல்லி, அவ்வரசன் முதலாகிய ஏழுபேரையும் அழைப்பித்து, "இப்பட்டணத்தில் சகலமும் கற்றறிந்தும் என் கையில் வாங்கின பணத்தைச் சமயம் பார்த்து மோசம் செய்தபடியால் கற்றறி மோழையாகும். இந்தத் தாசி வீட்டு நாய் என் கையிலிருந்து ஒரு தரம் கொடுத்த பலகாரம் தின்ற நட்பு மறவாமல் உதவிசெய்தபடியால் கைநட்புச் சேவகனாகும்.

இந்தத் தாசி குலஸ்த்ரீ அல்லாதிருந்தும் ஆபத்திலே என் தலையைக் காத்தபடியினாலே தாசியிற் சாதியாகும். இவ்வரசன் மகள் குலஸ்த்ரீயாக இருந்தும் தலைக்கு ஆக்கினை நேரிடும்படியாகச் செய்தபடியால் சாதியிறாசியாகும். இச்சேவுகர் நான் என்ன சொல்லியும் கேளாமல் லஞ்சம் வாங்கிக்கொண்டு கேட்டபடியால் ஊர் திரிகின்ற நாயாவார். இம்மந்திரி மனுசனாய் இருந்தும் என் வாய்ப்பிறப்பைக் கேளாமல் கொல்லச் சொன்னபடியால் மனிதரிற் கழுதையாகும். இவ்வரசன் பகுத்தறிவில்லாமல் சிம்மாசனத்தின் பேரிலே ஏறியிருக்கிற படியால் சிம்மாசனமேறுகிற கடாவாகும்" என்று சொன்னான். இதுகளைக்கேட்டு இராயர் அதிக சந்தோஷத்தை அடைந்தார்.

பதின்மூன்றாவது

மனக்கவலை பலக்குறைச்சல் என்றது

இராயருடைய பட்டணத்தில் தாயால் யாதொரு குறைவும் இல்லாமல் பொசிக்கப் பலப்பட்டுக்கொண்டு யாதொரு கவலையுமில்லாமலிருக்கிற ஒரு வாலிபனானவன் தனக்குமுன் வருகின்ற யானைகளுடைய கொம்புகளைத் தன்னுடைய கைகளினாலே பிடித்துப் பத்துமார் தூரம் பின்னிட்டுப் போகும்படி நெட்டிவிட்டுப் பேசிக்கொண்டிருப்பான்.

ஒரு நாள் இராயர் சவாரி போகும்போது அவன் ஒரு யானையை நெட்டித் தள்ளி விட்டுப்போகிறதைப் பார்த்து அப்பாச்சியை நோக்கி, "இவன் இப்படிச் செய்வது என்ன காரணம்? இவ்வளவு வல்லமை இச்சிறுபாற்கு எப்படி இருக்கலாம்?" என்று கேட்க, குடும்பக் கவலை எவளவும் இல்லாமையால் இவ்வளவு பலத்துடந் இருக்கிறான்" என்று சொன்னான்.

பின்பு அவ்விருவரும் அந்தப் பிள்ளையாண்டானுடைய தாயாரை அழைப்பித்து, "உன்னுடைய பிள்ளை யாதொன்றால் சமுசாரக் காரியங்களை நிருவாகம் பண்ணிக்கொண்டு வருகிறான்" என்று கேட்டார்கள்.

அவள், "எனக்கு ஏக புத்திரனாகையால் அவனுக்கு யாதொரு கவலைக்கும் இடம் வையாமல் அவனை போஷித்துக்கொண்டு வருகிறேன்" என்றாள். அப்படியே

செய்வது நல்லதல்ல. அது பின்னாடிக்கு வருத்தத்துக்கு ஏதுவாயிருக்கும். ஆகையால் அவனுக்குச் சாப்பாடு போடும்பொழுது, 'நாளைக்கு உப்பில்லை, கொஞ்சம் உப்பு சம்பாதித்துக் கொண்டுவா' என்று கேள்" என்று சொல்லியனுப்பிவிட்டார்கள்.

அவள் அப்படியே தன் குமாரனுக்குச் சொன்னாள். அவள் அது சொன்னது முதற்கொண்டு "இதை நானெப்படிச் சம்பாதிப்பேன்" என்று பிள்ளையாண்டான் அதிகக் கவலையடைந்து கொண்டு இருந்தான்.

மறுநாள் அந்த வாலிபன் தெருவிலே போகும்போது ஒரு யானையை அவனுக்கு எதிரில் வரும்படி செய்ய, இவன் அதன் கொம்பைப் பற்றி நெட்ட அது இவனைத் தும்பிக்கையினாலே தூக்கிப் போட்டுப் போய்விட்டது.

அதை அப்பாச்சி இராயர்க்குக் காண்பித்ததுமன்றியில் அவனுடைய தாயாரை அழைப்பித்து நடந்த சங்கதிகளை விளங்கச் சொல்லி மனக்கவலையை பலக்குறைவுக்குக் காரணமென்று அறிவித்தான்.

அப்பாச்சியினுடைய புத்தியைக் குறித்து இராயர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.

பதினான்காவது

குறிப்பிற் சொன்னவைகளை வெளிப்படுத்தியது

இராயரும் அப்பாச்சியும் ஒருநாள் வழியில் போகிக் கொண்டிருக்கும்போது ஒருவன் உழுது கொண்டிருந்தான்.

கழனியைப் பார்த்து மூன்று ஸ்திரீகளில் ஒருத்தி, "இது முகத்துக்காமெ"ன்றாள். மற்றொருத்தி, "இது வாயிக்காமெ"ன்றாள். மற்றொருத்தி, "இது பிள்ளைக்காமெ"ன்றாள்.

"இவர்கள் இப்படிச் சொன்னதுகளின் வயனமென்ன?" என்று அப்பாச்சியைக் கேட்க, அப்பாச்சி, முகத்துக் காமென்றது மஞ்சள் பயிரிடுவதற்கான நிலமென்று, வாயிக்காமென்றது வெற்றிலைக் கொடி, நடுகிறதற்கான நிலமென்றும் சொன்னதுகளாம்" என்றும் சொன்னான். (ஒன்றிற்கான விளக்கம் சுவடியில் விடுபட்டுள்ளது. - பதிப்பாசிரியன்) அதைக்கேட்டு இராயர், அந்த ஸ்திரீகள் மூன்று பேரையும் அழைப்பித்து அவர்கள் வாய்ப்பேச்சையும் விசாரித்து அறிந்து மிகவும் மனம் மகிழ்ந்தார்.

பதினைந்தாவது

தனக்குள்ளது உலகத்திற்குமுண்டு தனக்கில்லாதது உலகத்திற்குமில்லை என்றது

ஒருநாள் இராயர் தனக்கு கேஷளாகச் செய்துகொண்டிருக்கும் அம்பட்டனைப் பார்த்து "இந்தப் பட்டணத்தில் எல்லோரும் சவுக்கியமாய் இருக்கிறார்களா?" என்று கேட்க, அதற்கு அவன், "எவ்வளவு எளியவராய் இருக்கிறவர்களுக்குள்ளேயும் எலுமிச்சங்காயளவு பொன்னுக்குக் குறைச்சலுள்ளவர் ஒருவருமில்லை" என்றான்.

சமீபத்திலிருந்த அப்பாச்சியைப் பார்க்க, அப்பாச்சி சற்று நேரம் யோசித்துப் பார்த்து இராயருக்கு அம்பட்டன் மறவிலக்கால் கேஷளாகச் செய்யப்போனபோது தன்னுடைய ஊழியக்காரன் ஒருவனைவிட்டு அடப்பத்தைச் சோதித்து அதிலிருந்த எலுமிச்சங்காயளவு பொன்னை எடுத்து அம்பட்டன்போன பின்பு இராயருக்குக் காண்பித்து, அதனாலேதான் அவன் தனக்குள்ளது உலகத்திற்குமுண்டு; தனக்கில்லாதது உலகத்திற்கும் இல்லை என்று நினைத்து அப்படிச் சொன்னான் என்று தெரிவித்து அதைத் திரப்படுத்திவைத்து, இன்றே கேஷளாகத்துக்கு அவனை இப்போது கேட்டதுபோலே கேட்டால் அப்போது அவன் சொல்லுகிற சங்கதியும் தெரியலாம்" என்றான்.

இராயர் அப்படியே அவனை மறு கூட்டி வந்து கேட்ட பொழுது, "அப்படி மகாராசாக்களுக்குள்ளேயும் மெவடம்பமே யல்லாமல் எலுமிச்சங்காயளவு பொன் உடையவர் யாருமில்லை" என்றான்.

பின்பு இராயர் அப்பாச்சியைப் பார்த்து, உன்னைப் போலவும் விவேகமுள்ள மந்திரி எந்தத் தேசத்திலும் கிடைப்பது மிகவும் அரிதென்று மெச்சி அம்பட்டனுக்கு அவன் பொன்னைக் கொடுத்துவிட்டார்.

பதினாறாவது

கற்றறி மூடர்களைக் காட்டியது

வடதேசத்திலே பத்து வயது முதலாக முப்பது வரைக்கும் தர்க்கசாஸ்த்திரம் ஒன்றே படித்த ஒரு தார்க்கிகனும் வியாகர்ண சாஸ்த்திரம் ஒன்றையே கற்றவொரு வையாகரணியும், பரதசாஸ்த்திரம் ஒன்றையே அப்பியாசித்த ஒரு பாடகனும், சோதிட சாஸ்த்திரம் ஒன்றையே வாசித்த ஒரு ஒள்ளியனும், வைத்திய சாஸ்த்திரம் ஒன்றையே ஆராய்ந்த ஒரு வைத்தியனும் ஆகிய இவ்வைந்து பேரும் கூடிக்கொண்டு தேசாந்திரம் போய் பணம் சம்பாதித்துக் கலியாணம் பண்ணிக்கொள்ள ஆலோசிக்கும்போது வேலூரில் இராயர் வித்வான்களுக்கு வேண்டியபடி கொடுக்கிறாரென்று, அவரைக் காணும்படியாக அதுவரைக்கும் துணைகூட்டிக் கொண்டுவந்து, துணையாக வந்தவர்களை அனுப்பிவிட்டு இராயருடைய சபைக்குப் போய் அவனவன் தன் தன் வித்தையின் வல்லபத்தைக் காண்பித்தார்கள்.

இராயர், அப்பாச்சியைப் பார்த்து, "இவர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள்" என்று புகழ்ந்தார். அதற்கு அப்பாச்சி, "இவர்கள் வித்தையிலே எவ்வளவு கெட்டிக்காரர்களோ அவ்வளவு லௌகிகக் காரியங்களிலே மூடர்களாயிருக்கலாமென்று நினைக்கிறேன்" என்றான்.

இராயர், "அந்த மூடத்தனத்தை எனக்குக் காட்டவேணும்" என்று கேட்க, அதற்கு அப்பாச்சி, "அப்படியே காண்பிக்கிறேன். இன்றைக்கு இவர்களைச் சாப்பிட்டுவரும்படி அனுப்பி வையுங்கள்" என்றான்.

அப்படியே இராயர் அனுப்பிவிட்டார். பின்பு அப்பாச்சி, அவர்களை அறியாமல் நடக்கிற காரியத்தைப் பார்த்துவரச் சொல்லிச் சில சேவுகரை அனுப்பினான்.

அவ்வைந்து பேர்களுக்குள்ளே தார்க்கீகன் நெய்க்குபோய் ஒரு தொன்னையிலே வாங்கிக்கொண்டு வரும்கையிலே இருக்கிற நெய் தொன்னையைப்பார்த்து, நெய்க்குத் தொன்னை

ஆதாரமோ தொன்னைக்கு நெய் ஆதாராமோ என்று தர்க்கபுத்திகளைக் கொண்டு நெடுநேரம் யோசித்துப் பார்த்துச் சந்தேகம் தீராமையால் தொன்னையைக் கவிழ்க்க நெய் முழுவதும் ஒழுகிப்போனதைக் கண்டு நெய்க்குத் தொன்னையே ஆதாரமென்று நிச்சயித்துக் கொண்டுவந்து சேர்ந்தான்.

வியாகர்ண வித்துவான் தயிர் வாங்கப் போய் ஒரு இடைச்சி தயிரோ என்ற கடைசி ஓகாரத்தைப் பார்த்து மாத்திரை அளவாக நீட்டிக் கூவுகிறதைக் கேட்டு, “இந்த இரண்டு மாத்திரையுள்ள ஓகாரத்துக்கு அதிக மாத்திரை வியாகரணிக்கு விரோதமாக உச்சரிக்கிறாயே?” என்றும், “பயித்தியக்காரி” யென்றும் அவளுடன் நெடுநேரம் சண்டையிட்டுக் கோபித்துக் கொண்டு தயிர் வாங்காமல் வந்தான்.

பாடகன் உலையில் அரிசியைக் கழுவிப் போட்டு, தளதள வென்று கொதிக்கிற ஓசையைக் கேட்டு, அதற்குச் சரியாகத் தாளம் போட்டு, அத்தாளத்திற்கு ஒத்துவராமையினாலே கோபங்கொண்டு சோற்றுப்பானையை உடைத்துவிட்டான்.

சோதிட சாஸ்த்திரி இலை பறிக்கப்போய்ப் பாதி மரத்திலே ஏறும்போது கவுளி சொன்னதைக்கேட்டு ஏறுதற்கும் இறங்குதற்கும் தடையாய் இருக்கிறதை அறிந்து வெகுதூரம் அங்கேதானே இருந்து பின்பு சும்மா வந்துவிட்டான்.

வைத்தியன் கறிகாய் வாங்கிக்கொண்டுவரப் போய்த் தன்னுடைய வைத்திய நூற்பட்ட அந்தந்தக் கறிகாய்களிலிருக்கிற தோஷத்தை அறிந்து அதுகளையெல்லாம் தள்ளிவிட்டு வெறுங்கையனாய் வந்துவிட்டான்.

இந்தச் சமாசாரமெல்லாம் தான் அனுப்பிய மனுசனால் அறிந்து அப்பாச்சி இராயரைக் கொண்டு சேவுகரைவிட்டு அவ்வைந்து பேரையும் அழைப்பித்து விசாரிக்கும் அளவில் நடந்த சங்கதிகளையெல்லாம் அவர்கள் சொல்லக்கேட்டு இராயர் ஆச்சரியப்பட்டு அப்பாச்சியைப் புகழ்ந்து கொண்டாடினார்.

பதினேழாவது

குறிப்பாகச் சொன்ன உபமானங்களை வெளிப்படுத்தியது

ஒருநாள் இராயர் வேட்டைக்குப்போன இடத்திலே தமக்கு வெயிலினால் உண்டாகிய சிரமம் தீர ஒரு குளக்கரையில் உட்கார்ந்து இருக்கும்போது, வழிப்போக்கர்களாகிய மூன்று பெண்டுகளுக்குள்ளே ஒருத்தி "காலுங்கழியும் ஒன்றடி!" என்றும், மற்றொருத்தி "இறகும் இலையும் ஒன்றடி!" என்றும், பின்னொருத்தி "வாயுங் கனியும் ஒன்றடி!" என்றும் பேசிக்கொண்டு போனார்கள்.

அந்த மூன்றுபேர் சொன்னதுகளையும் இராயர் கேட்டு, அவைகளின் பொருளை நெடுநேரம் ஆலோசித்துத் தனக்குத் தோன்றாமையினாலே அரண்மனைக்குவந்த பின்பு சபையாரையெல்லாம் கேட்டுப் பார்த்தும் ஒருவரும் சொல்ல மாட்டாமையினாலே அப்பாச்சியை அழைப்பித்து அந்த வாக்கியங்களுக்குத் தாத்பர்யம் என்னவென்று கேட்டார்.

அவன் சற்றுநேரம் ஆலோசித்துப் பார்த்து, "அந்தப் பெண்டுகள் கண்ட ஓர் ஆலமரத்திலிருந்த கிளியைக் குறித்துப் பேசியதுகளாகும். காலும் கழியும் ஒன்றென்றது அக்கிளியின் காலையும் அம்மரத்தின் கிளையையும் சொல்லியதென்றும், இறகும் இலையும் ஒன்றென்றது அக்கிளியின் இறகையும் அம்மரத்தின் இலையையும் சொல்லியதென்றும், வாயுங் கனியும் ஒன்றென்றது அக்கிளியின் வாயையும் அம்மரத்தின் கனியையும் சொல்லியது" என்றும் அறிவிக்க இராயர் கேட்டுச் சரிதானென்றும் மிகவும் சந்தோஷமடைந்தார்.

பதினெட்டாவது

விபசாரி மோசத்தைக் கண்டுபிடித்தது

ஒருவன் ஸ்த்ரீகளைக் கலியாணம் செய்தால் விபசாரம் பண்ணுவானென்று வெகுநாள் வரைக்கும் கலியாணம் பண்ணாமல் இருந்தான்.

ஒருநாள் ஒரு விபசாரி அவனைக்கண்டு, மற்ற ஸ்த்ரீகளைப் போல என்னை நினைக்காதே. நான் கற்புடையவளாயிருப்பேன்" என்று தன்னிடத்தில் நம்பிக்கை வரும்படி சொன்னாள்.

அவள் வாய்மொழிகளை நம்பி அவளைக் கலியாணம் பண்ணிக்கொண்டான். சிலநாள் பொறுத்துத் தன் புருசனுடனே, "நீ வெளியிலே போய்வருகிற வரைக்கும் கதவைத் திறவாமல் தாள்பூட்டி இருப்பதற்கும், நீ வருகிற குறிப்பை அறிந்து கதவைத் திறந்துவைப்பதற்கும் நீ இருக்கிற ஏற்றத்தில் ஒரு மணிகட்டி வைத்தால் நலமாயிருக்கும்" என்று சொன்னாள்.

அது நல்ல யோசனையென்று அப்படியே செய்தான். அவன் மணி அசைக்கிறவரைக்கும் எதிர்வீட்டிலிருக்கும் ஒருவனை உள்ளே அழைத்து ஏகபோகமாக இருந்துகொண்டு, மணி நின்றால் அவனை வெளியிலே அனுப்பிவைத்துக்கொண்டிருந்தாள்.

ஒருநாள் இராயரும் அப்பாச்சியும் அந்த வழியாக வரும்பொழுது "ஏற்றத்தில் மணி கட்டியிருக்கிறது என்ன ஆச்சரியம்?" என்று அப்பாச்சியைக் கேட்க, அப்பாச்சி "இதோ தெரியப்படுத்துகிறேன். அந்த விசித்திரத்தைப்

பாருங்கள்" என்று ஏற்றத்தின் மேலே மிதிக்கிறவனை அழைத்து, "இவ்வேற்றத்தில் மணி கட்டுதற்குக் காரணமென்ன?" என்று கேட்க, அதற்கு அவன், என் பெண்சாதி தன் கற்புக்குக் குறைவராமல் நான் வீட்டுக்கு வருவதை அறிந்து கதவைத் திறக்கவும் மற்ற வேளை மூடிவைக்கவும் செய்யச் சொன்னது என்றான்.

அதுகேட்டு அப்பாச்சி, "என் எசமானுக்குத் தாகமாயிருக்கிறது. உங்கள் வீட்டுக்குப்போய் ஒரு சொம்பு மோர் கொண்டுவா" என்றான்.

"அந்தமட்டுக்கும் ஏற்றம் நிற்குமே எப்படி?" என்றான். அந்தமட்டும் நான் ஏறி மிதிக்கின்றேன். நீ போய்க் கொண்டுவா" என்றான். அப்படியே அப்பாச்சியை ஏற்றத்தின்மேலே ஏற்றிவிட்டுத் தான் வீட்டண்டையிலே போய்க் கதவைத் தட்டும்போது தன் பெண்சாதியும் எதிர்வீட்டுக்காரனும் சரசம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

கதவைத் திறந்தால் விபசாரம் தெரிந்துபோமென்று சீக்கிரத்தில் அந்த சோர புருஷனை அங்கிருந்த பாயில் சுருட்டிவைத்து மோர் பானையண்டையிலே வைத்துவிட்டுக் கதவைத் திறந்தாள்.

இவன் சீக்கிரமாக மோர் கொண்டுவரவேண்டுமென்ற அவசரத்தில் செம்பையெடுத்துக் கொண்டு மோர்ப் பானையண்டையிலேபோய் அதன்மேலே சாத்தியிருக்கும் பாயைத் தள்ளிவிட்டு மோர் மொண்டான்.

அந்தப் பாய்க்குள்ளிருக்கும் மனிதன் திடீரென்று கீழே விழும்பொழுது, அவன் தலை அம்மிக் கல்லிலே பட்டு உடைந்தது. அவன் மிகவும் கூச்சலிட்டான். அப்புறம் விசாரிக்கும்போது, தன் பெண்சாதிக்கு வேஷக்காரனென்றும் நெடுநாளாக இருவரும் கலப்பாக இருக்கிறார்களென்றும் அறிந்து விசனப்பட்டுக் கொண்டே மோர் கொண்டுபோனான்.

அந்த மோரைச் சாப்பிட்டு, இராயர் "ஏனப்பா இந்நேரம்?" என்று கேட்டார். அதைச் சொல்லுகிறதற்கு வாய் எழாமல் மரம் போலே நின்றான்.

"நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். உள்ளதைச் சொல்" என்றார். அப்புறம், தான் கலியாணம் பண்ணாமலிருந்த விதமும் மறுபடியும் பண்ணிக்கொண்ட சங்கதியும், தன் பெண்சாதி தன்னை மோசம் செய்ய யோசித்துத் தன்னை ஏற்றத்தில் மணிகட்டச் சொன்ன உபாயத்தையும் தான் மோருக்குப் போகும்போது பிரத்தியச்சமாகத் தான் கண்ட சாட்சியும் சொன்னான். அதைக் கேட்டு, "லோகத்திலே ஸ்த்ரீகளை* நம்பக்கூடாது. ஆகையால் விசனப்படாதே" என்று சொல்லிவிட்டு, இராயரும் அப்பாச்சியும் அப்புறம் அவ்விடம் தாண்டின பிற்பாடு, இராயர் மெச்சினேன் உன்னை என்று அப்பாச்சியை கட்டிக்கொண்டார்.

